உ

# 'சுகநேசன்.'

## ஓர் இனிய சுகாதாரத் தமிழ் நாடகம்.

---

உசிலம்பட்டி,

தாலுகா போர்டு பிரஸிடெண்டு அவர்களின்

விருப்பத்திற்கிணங்க, சில கனவான்

களின் பேருதவியுடன்

---


உசிலம்பட்டி, தமிழாசிரியர்

இ. ஸ்ரீ. கோவிந்த ஐயங்காரால்,


எழுதப்பெற்று,

---


மதுரை கொண்டா பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றது.

---

1923.



24 JAN 1924

# சுகதேசன்.

894.8
3074
24 JAN 1924

## கடவுள் வணக்கம்.

### விருத்தம்.

பூமாது வாழுமொரு மாதேவ புண்ணியா
பூதமாய் நின்ற பெரும்!
புகழுமா புவியெலாம் புகல்வேத மாதியாய்
புரையற நிறைந்த உருவே
காமாதி யாவையும் போமா றருள்செயும்
கருணையாய் நின்ற வடிவே
கண்ணிய நிறைந்ததோர் பண்ணியல் னுவலின்
கருத்துமாய் நின்ற பொருளே
தீமைசேர் நோயெலாம் தீர்த்தருள் தேவனே
ஜெகமொளிர் மாந்தர் யார்க்கும்
திண்ணியல் காத்திரமும் சேர்புகழ்ச் சுத்தமும்
தீர்க்காயுளு மீகுவாய்
பாமலி நாடொறும் பாடிப்பணி பக்தர்
பாக்கியம் ஆனதேவே
பரந்தரும் உயர்பெரும் வரந்தரும் உரந்தரும்
பரந்தாமனான நீயே.

# ஆக்கியோன் உரை.

சுகாதார இலாகா தலைவர் அவர்களது அபிப்பிராயப்படி சுக வாரக் கொண்டாட்டத்தில் இத்தகைய நாடகம் ஒன்று நடித்துக் காட்டவேண்டும் என்று கருத்துக்கொண்ட, உசிலம்பட்டி தாலூகா போர்டு பிரஸிடெண்டும், பொது நலத்திற்கே தம்முடல் பொருளாவி மூன்றையும் ஈந்து உழைப்பவரும் ஆகிய கனம் தங்கிய ராவ் சாகிப் J. A. வேதநாயகத்தேவர் அவர்களது கோரிக்கையின்படி இப்புத்தகத்தை யான் எழுதினேன்.

வைத்திய சாஸ்திரத்தில் ஓர் சிறிதும் பயிற்சிபெறாத என்னை இத்தகைய புத்தகம் எழுதுமாறு தூண்டியதோடு நில்லாது தங்களுக்கு அவகாசம் கிடைத்தபோதெல்லாம் வந்து, வியாதிகளைப்பற்றிய விஷயங்களைப் பசுமரத்தாணிபோல் என் மனத்திற் பதித்த கனம் பிரஸிடெண்டு அவர்களுக்கு என்மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

அத்துடன் சுகாதாரத்தைஇன்னமுறையில் நாடகமாகஇயற்றவேண்டும் என்பதைக் கூறியும், இப்புத்தக சம்மந்தமாய் வேண்டிய உதவிகள் புரிந்தும், உதவிய உசிலம்பட்டி, போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்டெண்டு பிரம்மஸ்ரீ P. S. ஜம்புராமசுவாமி ஐயர் அவர்களுக்கும் என் வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

தமது சுய நலங்களையும் மறந்து, என்னுடனேயே இருந்து தக்க புத்திமதிகள் கூறியும், தக்க கருத்துக்கள் புகன்றும் உதவிய இவ்வூர் உயர்தரக்கலாசாலைத் தலைமை ஆசிரியர் மகா-ள-ள-ஸ்ரீ S. நாராயணசுவாமி ஐயரவர்கள் மாட்டு நான் என்று மறவாத நன்றியுடையவனாவேன்.

"வேதநாயகப்பேர் வள்ளல் விமலனும் வித்யாசாலைக்
காதல் நாயகனும் நாராயணசாமிக் காதலோனும்
ஆதர வா[illegible] ராமப்பேர் ஐயர்தாமும்
பூதலம் [illegible] பொலிந்துவாழ்க"

இ. பூ. கோவிந்தன்.

உசிலம்பட்டி.

இந்நூலாசிரியன்.

24—12—23

186164
சென்னை-600 008

# I SCENE.

## கூடலூர் கிராமத்தில் மந்தை.

காலம் பகல்.

சுப்பர்த்தேவன், மூத்துசெட்டி, கதிர்வேல் நாடான், வேலுப்பிள்ளை மற்றுமுள்ள ஊர் ஜனங்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

சு:—ஊரிலே பல வியாதிகள் தொந்தரவு செய்கின்றன. வீடுவீடாய் அம்மை, பிளேக் முதலிய வியாதிகள் பரவிவிட்டன. வீட்டில் எலிகள் விழுகின்றன ஊரில் யாவரும் இவற்றைக் கவனியாது சும்மாயிருந்தால் யாது பயன்?

மூ:—என் வீட்டில் இரண்டு குழந்தைகள் அம்மையால் அவஸ்தைப்படுகிறார்கள். என் மனைவியும் விஷஜுரத்தால் மிக வருந்துகின்றாள். தெய்வக்குறையோ யாதோ? அறியேன்.

கதிர்:—உன் வீட்டில் மட்டுமென்று நினைக்கின்றாய்? சிலைப்பேன் ஜுரமாம். இதுவரை நாம் கேட்காத மாயஜுரம். என் மகன் படுக்கையிலேயே கிடக்கிறான். ஊர் முழுதும் எவ்வீட்டிலும் வியாதியில்லாதவர்களைக் காணல் அரிதாய் விட்டது. ஊரைக் காவல் புரியும் கடவுளரை வணங்காத குறையென்றே கருதுகின்றேன்.

வேல்:—ஆ! ஆ! நீ கூறின ஜுரத்தால்தான் நானும் அவதிப்படுகிறேன். இங்கிலையில் எழுந்து நடக்கவும் கூடாத என்னை அனைவருடனும் வீட்டைவிட்டுக் காலிபண்ணச் சொல்லுகிறார்கள் அதிகாரிகள். எலி விழுகிறதாம் நேற்று மெல்லமெல்லத் தடியூன்றி நடந்து வைத்தியசாலை அடைந்தேன். மருந்தினால் எந்த நோயும் குணப்படுமென்பார்களே. அதுவுமில்லையாம்

இதற்கு. மருந்து உட்கொண்டாற்போதாதாம். தலையை மொட்டையடித்துக் கொள்ளவேண்டுமென்றும், புதிய ஆடை அணிந்துகொள்ளவேண்டுமென்றும், பாய், தலையணை யாவற்றையும் தீக்கிரையாக்கவேண்டுமென்றும் கூறினார்கள். நோயுடன் அவஸ்தைப்படுவது போதாதென்று பணச்செலவும் சொல்லிவிட்டார்கள்.

மு:—நன்று நன்று! நீ முதலில் கூறியவாறு இது தெய்வக்குறை தான் நிச்சயம். கதிர்வேல் நீ விரைந்துசென்று கோடாங்கியை அழைத்துவா.

[கதிர்வேல் போதல்.]

க:—வியாதி வருவதுண்டு. வீடு முழுதும் வருவதென்றால் ஏதோ கடவுளுக்கு நாம் செய்யவேண்டிய பூஜைகளை மறந்துவிட்டதாகவே கருதுகிறேன்.

வேல்:—நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமென்பார். அது மெய்யே. என்னடா இது. வீடு முழுவதும் வியாதி. மழை பெய்திருக்கிறதே. உழுவது யார். வீட்டில் சமையல் செய்வது யார். மாடுகன்று மேய்ப்பது யார். வேறூரில் இருந்து அழைத்து வருவோமென்றாலும் அங்கும் நாம் எலி விழும் ஊரில் இருப்பதாற் போகக்கூடாதாம். தப்பி ஒளிந்து சென்றாலும் அங்கும் ஊர் முழுதும் நோயாயிருக்கிறது. இப்படி கடவுள் சோதித்தால் நாம் என்ன செய்வது.

## கதிர்வேல் கோடாங்கியுடன் வரவு.

க:—ஐயா கோடாங்கி! ஊர் முழுதும் வியாதியால் அவதிப்படுகிறதே. காரணம் என்னவென்று உடுக்கடித்துச் சொல்லப்பா.

கோ:—(உடுக்கடித்து) (சாமி கும்பிட்டு) இதோ வந்துவிட்டேன். என்னப்பா! இது என்னை அழைத்துக் கேட்கத்தான் உங்களுக்குத் தெரிகிறது சுவாமிகளுக்கெல்லாம் குறைவில்லாமற்

பூசைமுடிக்கவேண்டாமா, கொஞ்சம் உங்களூர் செழித்த வுடன் சாமிகளை மறந்துவிட்டீர்கள் அதுதான் காரணம் என்று சாமி சொல்லுது.

வேல்:—அதற்காகத்தானே கோடாங்கி இங்கே உன்னைக்கூப்பிட்டது. சரி, அப்படிச் சாமிகளுக்குப் பூசை போட்டால் நோய் ஊரைவிட்டு நீங்கும் என்று சொல்லு. அதுதானே.

கோ:—ஆமாம் அதேதான் குறை.

ச:—அப்படியானால் முத்துசெட்டி, நீ போய் நம்ம பூசாரியைக் கூப்பிட்டுவா.

[முத்துசெட்டி போகிறான்.]

வேல்:—என்ன எல்லாம் நம் நாட்டிற்குவந்து விட்டன, ஏயப்பா? சாமிக்குக் குறைவைத்தால் அப்படித்தான். அதுதான் கோடாங்கி சொல்லிவிட்டானே. தெரிச்சாப்புலே.

ச:—ஆமாம்டாப்பா! பணமில்லே பணமில்லேயென்று சாமியைப் பட்டினிபோட்டால், இதுதான். இப்போ கஷ்டப்படுகிறபோது எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது பார். ஆனாலுங்கஷ்டம்,

[பூசாரி வருதல்.]

ச:—வா அப்பா பூசாரி. உட்கார். இதென்னப்பா இது. ஊர் முழுதும் இப்படிக் கஷ்டப்படுகிறது? ஏதோ தெய்வக்குறையிருக்கிறதென்னு கோடாங்கி சொல்கிறான். அதற்கென்ன செய்யலாம் சொல்லு.

வேல். ஆமாம் அப்பா! ஒரு வியாதியாய் இருந்தால் பாதகமில்லே. ஆயிரத்தை ஏவியல்லவா கடவுள் சோதிக்கிறார்.

பூசாரி. (உட்கார்ந்து சற்று யோசிப்பது போல் இருக்கிறான்),

ச. ஊர் பொதுவில் சாமி கேட்கிறதெல்லாம் செய்யவேணுமப்பா. இல்லாவிடில் ஒரு பயனுமில்லே. எத்தனை நாளைக்குத்தான் இப்படி வருந்துவது.

எல்:—ஆமாம் அப்படியே செய்து விடுவோம். (பூசாரிதேகத்தால் நடுக்கம் காண்கிறது. கையைத்தரையுடன் அடிக்கிறான்). கண்கள் சிவக்கின்றன. திடீரெனக்கீழேவிழுந்து அழுகிறான். உடனே ஆடிக்கொண்டு. உம் வந்தாத்தேனே தெரியுது உங்களுக்கு. நீங்கள் உங்கள் சாப்பாட்டையும் சுகத்தையும் தானே கவனித்தீர்கள். உள்ளூர்த்தெய்வமொன்றுண்டே நம்மைக்காக்கிறதே என்று சற்றாவது எண்ணினீர்களா? அடாது செய்தவர்க்குப் படாதபாடுவிளைத்தேன். இப்பொழுது சாமிசும்மாவிடுவேனா? ஊரை ஓர் ஆட்டம் ஆட்டிப் பார்த்துத்தானே நிறுத்துவேன்.

[எல்லாரும் கும்பிட்டுக்கீழ்விழுந்தெழுந்து பூசாரியை நெருங்குகிறார்கள்]

பூசாரி:—இதுக்கெல்லாம் சமைவேணுநான், ஆடுகோழி முதலியவை வேண்டியவரை கொடுத்தாலல்லவா சாமி திருப்திப்படும். என்னை மற்ற ஊர்த்தெய்வமென்று நினைத்தீர்களா? பாருங்கள் என்வல்லமையை உம்.

சுப்:—சாமிமன்னிக்க வேண்டும். பிள்ளைகள் தெரியாமல் செய்த குற்றத்தைத் தெய்வம் பாராட்டலாமா? எது செய்யவேணுமோ அதைச்சொன்னால் குறைவில்லாமல் செய்துவிடுகிறோம். சாமிகோவிச்சா நாங்கள் என்ன செய்வோம். அறிந்தும் அறியாமலும் செய்த பிழையைப் பொறுக்கத்தான் வேணும் சாமி.

வேல்:—சாமி! குழந்தைகுட்டி யெல்லாம் தவிக்கின்றன. ஊர் முழுதும் இப்படி அவதிப்பட்டா சாமி கும்பிடுவது தான் எப்படி. சௌக்கியமாக்கிவைக்கவேணும் சாமி.

பூசாரி:—ஆமாம். நீங்கள் நினைத்த போது வியாதியை எடுப்பேனா. நீங்கள் செய்கிற பூசையில் என்மனம் மகிழ்ந்தால் தான் என் வயிற்றெறிச்சல் ஆறும். பிறகுதான் உங்கள் நோய் நீங்கும்; ஆட்டுரத்தம் உண்டு ஆறுமாசமாச்சே. கொண்டாருங்கள் வீட்டுக்கொரு கொழுத்த ஆடு கொடுங்கள் பலி வெள்ளியும்

செவ்வாயும் தவறாமல் பலி கொடுத்தால் தான் நான் சந்தோஷப்படுவேன். நிறை பொங்கல் வைத்தாலல்லவா நான் மகிழ்வேன் நான் போகப்போகிறேன். தவறாமல் செய் பூசை நீட்டுகையை

[சுப்பாத்தேவன்கையை நீட்டுகிறான். பூசாரி விபூதி கொடுத்து தெய்வம் மலையேறியது போல் கீழே சாதாரணமாய் உட்காருகிறான்.]

பூ:—என்னப்பா இது உடம்பெல்லாம் களைத்திருக்கிறது. சும்மா உட்கார்ந்து கொண்டுதானே இருந்தேன்.

சு:—ஐயா! பூசாரி உன்மேல்சாமிவந்து ஆடியது. என்னெல்லாமோ. அல்லவா குற்றம் கூறியது.

பூ:—என்னப்பா சொல்லியது;

வேல்:—என்னப்பா சொல்லச் சொல்லுகிறாய். சாமிகும்பிடாது போனால் இப்படித்தான். நான் அப்பொழுதே சொல்லவில்லையா?சாமி குற்றம் தான் என்று. போகிறது. இனிமேலாவது வர வெள்ளியன்று வீட்டுக்கு ஒரு கடாவாங்கி சாமிக்கு வெட்டிப் பூசை யிடவேண்டுமப்பா சாமியும் அப்படிச் செய்தால் வியாதியை நீக்குவதாய்க் கூறிவிட்டது. இன்னும் கொஞ்சநாள்தான் கஷ்டமெல்லாம்.

கதிர்:—முன்னமே ஒரு சிறு குட்டி வாங்கிவெட்டி யிருந்தாலும் ஏற்றுக்கொள்ளும் சாமி. இப்போது கொழுத்த கடாயல்லவா கேட்டுவிட்டது. வீட்டிலே சிக்கைப்பார்க்கிறதா. கொழுத்த கடாய்க்குக்கடன் வாங்குகிறதா. ஒன்றும் தோன்றாமலல்லவா திகைக்கவேண்டிவருகிறது.

சு:—சீ பைத்தியமே ஒன்றும் பேசாதே. சாமி கும்பிடுவதை மறந்தால் அப்படித்தான் ஒன்றுக்கிரண்டு செலவாகும். இப்பொழுதும் இதைச் செய்யவில்லையானால் உயிருக்கல்லவாடா மோசம் வரும். அப்படியல்லடா கோபமாயிருக்கிறது சாமி.

பூ:—இவ்வளவு கோபமாயா பேசிற்று சாமி. பின் ரொம்ப ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். பத்துக்கிருபதாவது போட்டுத்தான் கிடாபிடிக்கவேணும். யோஜிக்கலாமோ. (ஊராரெல்லாம் கட்டுப்பாடு செய்து கிடாய் வெட்டுவதாய் பேசிக்கலைகிறார்கள்.)

பூசாரி:—(தனிமொழி) சாமியாவது தம்பிரானுவது. போகிறது. வெள்ளிக்கிழமையன்று தவறாமல் நூறு ஆட்டுத்தலையும் சுமார் 50 ரூபாய்க்குக்குறையாமலும் எனக்குக் கிடைக்கும். என்னைப்போன்றவர்கள் பிழைப்பதற்கு இது தான். இல்லாவிடில் இவர்கள் மணதோடு ஏதாவது செய்வார்களோ. கஷ்டம் வந்தால் தான் பூசாரியைத்தேடுகிறார்கள்.

(செல்லுகிறான்)

## II SCENE.

### இடம் சுப்பத்தேவன் வீடு

| | | |
|---|---|---|
| பாத்திரங்கள் | சுப்பத் தேவன் | கருப்பத்தேவன் |
| | கொசு சுரம் | காம்புச்சிலந்தி |
| கருப்பாயி (பேன் சுரம்) | வெள்ளையம்மாள் (அம்மை) | மீனாட்சி (கெர்ப்பினி) (கொக்கி புழு) |
| சொக்கலிங்கம் (பிளேக்கு) | | |

சுப்பத்தேவன்:—அப்பா! இதென்னசுரமோ நேற்று விட்டிருந்தது. சாமிகேட்கவாவது போயிருந்தேன். மிகுதியாகக் குளிர்கிறது. மண்டையை வலிக்கிறது, பண்டிதனைக் கேட்டால் ஒன்றிருக்க ஒன்று சொல்லுகிறான். மூந்தா நாள் காலையில் மிகுதியான சுரமடிக்கையில் அது ஜன்னி என்றான். உடனேயே என்னமோ அதற்கு மருந்து கொடுத்தான். அதற்கு பத்தியம் என்று சரியான கஞ்சிகூட குடிக்கக்கூடாதென்று சொல்லிவிட்டான். கஞ்சியில்லாமல் எத்தனை நாள் கஷ்டப்படுகிறது.

கருப்பன்:—(கால் கட்டுடன் உட்கார்ந்து) ஐயோ வலி பொருக்க முடிய வில்லையே நரம்புச்சிலந்தி வந்து விட்டால், இப்படியா கஷ்டப்படுத்தும். அந்தமாயக் கிணற்றில் போய் குளித்தது முதலல்லவா வந்துவிட்டது. அதில் என்ன தான் மாய மிருக்கிறதோ தெரியவில்லை. முன்னால் குடித்தது கூட அந்த ஜலம் தானே. அப்பொழுதெல்லாம் அது ஒன்றும் செய்ய வில்லை. இப்பொழுது எனக்கு கஷ்டகாலத்தினால் தான் இப்படி துன்பப் படுத்துகிறது.

கருப்பாயி:—வீடு முழுதும் வியாதியென்றால் யாரிடத்தில்சொல்லி யழுகிறது. இரண்டுநாளாய் விட்டிருந்த சுரம் பழையபடி வந்து விட்டதே. பொறுக்க முடியவில்லையே, ஐயோ! (அழுகிறாள்.)

## பண்டுதன் வரவு.

பண்டுதன்:—தேவரே! இன்றைக்கு உடம்பு என்னமாயிருக்கிறது.

சுப்பத்தேவன்:—நேற்றுக்கொஞ்சம் சுரம் விட்டிருந்தது. சாமி கேட்கப் போயிருந்தேன். இன்றைக்கு பழையபடியல்லவா வந்து விட்டது ஐயோ பொறுக்க முடியவில்லையே குளிர்கிறது.

பண்டுதர்:—இதுதானே சொன்னால் கேட்கமாட்டீர்கள் கொஞ்சம் உடம்பு சௌக்கியமாயிருந்தால் வெளியிலேயே போகலாமோ. நான் பத்து ரூபாய் மருந்தல்லவோ நேற்றுக் கொடுத்தேன். அதன் பயனாகத்தான் நேற்று கொஞ்சம் குணம் கண்டது. (கை பிடித்து) ஐயையோ பித்த நாடியல்லவா ஜாஸ்தியாயடிக்கிறது. ஜன்னி பிறந்து விட்டதே. வெளியிலே போக வேண்டாமென்றால் கேட்கிறீர்களா. அதுதான் காரணம். பத்து ரூபாய் மருந்து வீணாய்ப்போச்சே. இன்னும் 20 ரூபாய் செலவும் வைத்து விட்டீர்களே.

சுப்:—எல்லோரும் கூடிப்பேசுகிறார்களே என்று போனேன். இது வருமென்று நான் நினைக்கவில்லையே.

பண்:—போகிறது. பணத்தை செலவழித்தால் பிடைபோகுமென் பார்கள். முந்தா நாள் மருந்துக்குப் பத்து ரூபாயும், இன் றைக்குச் செய்யவேண்டிய மருந்துக்கு ரூபாய் இருபதும், ஆக முப்பதும், இப்பொழுது கொடுத்தால் போய் மருந்து வாங்கிச் செய்து வருகிறேன். இது இப்படியே இன்று சாயந்திரம் வரையிலிருந்தால் சொல்லமாட்டேன்.

கருப்:-போம் ஐயா வைத்தியரே! பத்துநாள் மருந்துவைத்துக் கட்டியும், பலனைக் காணோம். நாளுக்கு நாள் வலி அதிகமாகிறது. இல்லாதெல்லாம் சொல்லிபணத்தைப்பிடுங்கத்தான் உமக்குத் தெரியும் போலிருக்கிறது.

பண்டிதன்:—ஆமாம் சொல்லுவீர்கள். ஏன் நானல்லவா பைத்தியக் காரன் நான் பார்க்கமாட்டேன் என்று கூறி இங்கிலீஷ் வைத் தியசாலைக்கு அனுப்பி விட்டால் ரூபாய்200 செலவுடன் காலை அறுத்துக் கொண்டு வந்தாலல்லவோ தெரியும். 10 ரூபாய்ச் செலவில் அதிக சிரமமில்லாமல் பச்சிலை வைத்துக் கட்டுகிற எனக்கு இதுவேண்டியது தான். (சுப்பத் தேவனைப்பார்த்து) ஐயா தங்கச்சிக்கு உடம்பு எப்படி யிருக்கிறது?

சுப்:—போய்ப் பாரும் ஐயா. இங்கு என் பிராணன் போகிறது.

பண்:—(கருப்பாயியை நோக்கி) தங்கச்சி! எப்படி யிருக்கிறது உடம்பு?

கருப்:—என்ன ஐயா? வீட்டில் கஞ்சி காய்ச்சக்கூட ஆளில்லை. நேற் றுப்பழைய கஞ்சியைக் குடித்துப் படுத்தேன் எழுந்திருக்கக் கூடமுடியவில்லையே சுரம் அதிகமாயிருக்கிறது. என்ன செய் வேன்.

பண்:—நீங்கள் செய்வதெல்லாம் அக்கிரமம். சுடு கஞ்சி தவிரவே றொன்றும் சாப்பிடக்கூடாதென்று சொன்னேனே. கேட் டால் தானே. பழைய கஞ்சி பெருஞ் சுரத்தை வரவழைத்து விட்டது. வைத்தியன் சொல்வதை வியாதியஸ்தன் கவனித் கால் தானே கவனிக்காவிட்டால் இப்படித்தான். பணச் செ

லவுதான். இதற்கும் இன்று ஐந்துரூபாய் தேவர். வெளியிலேயே போய்ச் சிக்கை வரவழைத்துக் கொண்டார். நீ பழைய கஞ்சி குடித்து வியாதியை அழைத்தாய் மீனாக்ஷிக்கு என்னமாயிருக் கிறது?

கருப்பாயி:— அவதான் கஞ்சி கொடுத்துக் கொண்டிருந்தாள். அவளும் ஏதோ ஒரு வகையாய் அல்லவா படுத்திருக்கிறாள். கையைப் பிடித்துப் பாருங்கள் ஐயா! (மீனாட்சி கையை காட்டு கிறாள்.)

பண்டிதர்:—(கைபார்த்து) சிக்குத்தான் முற்றிவிட்டதே. காமாலை முற்றி சோகையாய், சோகை முற்றி பாண்டுவும் முற்றி விட்டதே. கர்பமாயிருக்கும் குழந்தையை இப்படி நீங்கள் கவனியாமலிருக்கலாமா?

கரு:—என்ன செய்கிறது சொல்லுங்கள்.

பண்:—செய்வதென்ன வாராத நோய் வந்தால் வாராத செலவும் தான் வரும் என்னிடம் இதற்கு ஒருலேகிய மிருக்கிறது. நாற்பது வேலையில் குணப்படுத்தும். 10 வேளை மருந்துக்கு ரூபா 6 ஆகிறது. உங்களுக்காக நாற்பது வேளை மருந்தும் 6 ரூபாய்க்குக் கொடுக்கிறேன்.

கரு:—தேவரிடம் சொல்லுங்கள்.

பண்:—தேவர் ரூபாய் என்று கூறிவிட்டால் வியாதி அதிகப்பட்டுச் செத்துவிடுவாரே. இனுமாய் மருந்து வந்தால் இனுமாய்க் கொடுக்கலாம். கடையில் ரூபாய் கொடுத்துச் சரக்குவாங்கித் தானே நான் மருந்து செய்யவேண்டி யிருக்கிறது. என்ன செய்வேன் சொல்லு அதிருக்கட்டும் குழந்தைக்கு அம்மை எப்படி யிருக்கிறது. சுவாமிக்கு நேர்ந்து கொண்டீர்களோ இல்லையோ?

கருப்:—ஆம் ஐயா நேற்று நேர்ந்து கொண்டு விட்டோம். அம்ம னுக்குத்தான் கிருபை வேணும். பையன் சொக்கலிங்கம்

பிளேக் ரோயால் வருந்துகிறுன். மேல் எல்லாம் கட்டி புறப்பட்டு உடைகிறது.

[பிளேக் என்ற வார்த்தையைக் கேட்கவும் வைத்தியர் வேகமாய் வாசலுக்குச் சென்று தேவரே! நான் போய் வருகிறேன்.

சு:—சும்மாப்போனுல்? வைத்தியர் கடனும் வாணியர் கடனும் ஆகாதல்லவா? பையனும் பட்டணத்திலே வைத்தியம் படிக்கிறுன். வருமாறு கடிதம் எழுதி சுமார் ஒருவார காலமாயிற்று. நாளது தேதி வரை காணவில்லை. செலவுக்கு வேண்டிய பணம் வாங்கிப்போய் மருந்து செய்து கொண்டு வாரும்.

க:—எவ்வளவு கொடுக்க?

சு:—பழைய பாக்கி பத்து ரூபாயும் இனிச்செய்யவேண்டிய மருந்துக்குப் பத்து ரூபாயும் கொடு.

பண்:—பத்து ரூபாய் உமக்கு மட்டுமே போதாதே.

சு:—வாங்கிப்போம் ஐயா. பின்னுல் மீதியைக் கொடுக்கிறேன்.

பண்:—இருபது ரூபாயாவது வேண்டும். இல்லாவிட்டால் என்னுல் மருந்து கொடுக்க இயலாது.

சு:—சரி வாங்கிப்போம்.

[பண்டிதன் கருப்பணனிடம் ரூபாய் வாங்கிப்போகிறுன்.]

(தனி மொழி)

சுப்பாத்தேவன்:—நாளுக்கு நாள் வைத்தியனுக்குக் கொடுக்கும் பணம் தான் அதிகப் படுகிறது. யாதொரு பலனையும் காணேம். நோயும் மென்மேலும்வளர்கிறது. மாடுகன்றுகளைப் பார்க்கவும், வயலுக்குப் போகவும் ஆளில்லை. மகனை வரும்

படி கடிதம் எழுதி ஒருவாரத்துக்கு மேலாகிறது. அவன் வரவில்லை, அவனுக்கு ரஜா கிடைத்ததோ என்னவோ தெரியவில்லை. மனம் சஞ்சலப்படுகிறது. பூசாரியைக் கேட்டால் ஆடுவெட்ட வேண்டும் கோழியறுக்க வேண்டும் என்கிறான். வைத்தியன் பணத்தைப் பிடுங்கித் தின்கிறான்.

## III. SCENE.

இடம்:—மெடிகல் காலேஜ்-மதராஸ்
களைப்பாறும் இடம்,
காலம்:—சிற்றுண்டிவேளை.

பாத்திரர்:—இராமசாமி, ஜோஸப், இப்ராஹிம்,
தபாற்காரன் வரவு.

---

தபா:—யாரையா அது. ராமசாமி!

இரா:—(வெளிவந்து) யான்தான் யாது விசேஷம். கடிதம் ஏதேனும் உண்டோ.

தபா:—ஆம். (கடிதத்தை நீட்டுகிறான்.)

ஜோ:—என்ன ராமசாமி ஊரிலிருந்து கடிதம் வரவில்லையென்று மிரம்ப வருத்தப்பட்டுக் கொண்டனையே இப்பொழுது திருப்திதானு?

[இராமசாமி பிரித்து மனதிற்குள் படிக்கிறான். உடனே அவன் முகத்தில் துக்கக்குறி காணப்படுகிறது.]

இப்:—என்ன இராமு! உன் முகத்தில் வாட்டமுண்டாகிறது. துக்கமான கடிதமோ அது? யாருக்கு என்ன?

ஜோ:—என்ன! என்ன! (நெருங்குகிறான்.)

சாம:—என்ன சொல்லச்சொல்லுகிறீர்கள், என் ஊர் முழுவதும் வியாதியால் உபத்திரவப்படுகிறதென்று என் தகப்பனார் எழுதியிருக்கிறார். என் வீட்டில் யாவரும் வியாதிகொண்டு வருந்துகிறார்களாம். என்ன செய்வது ஒன்றும் தோன்றாமல் திகைக்கவேண்டியிருக்கிறது.

ஜோ:—ஏன் அக்கடிதத்தை நாங்கள் பார்க்கலாமல்லவோ?

சாம:—ஆஹா இதோ வாசிக்கிறேன்.

[அப்பரிதாபமான சமாசாரத்தை படிக்கிறான்.]

சிரஞ்சீவி, மகன் இராமசாமிக்கு பலக்ஷேமங்களும் உண்டாக கடவுள் அனுக்கிரகம் செய்வாராக. இப்பொழுது சுமா. ஒருமாதகாலமாய் பல நோய்கள் ஊரில் தொந்திரவு செய்கின்றனர் ஊரில் வியாதியில்லாதவர் ஒருவருமில்லை. நமது வீட்டில், எனக்கு ஒருநாள் விட்டு இருநாள் விட்டு ஜுரமடிக்கிறது. உன் தாய்க்கும் அதேமாதிரிதான். மிகுந்த உபத்திரவம் அடைகிறாள். உன் தம்பி சொக்குக்கு கட்டி புறப்பட்டு உடைகிறது. கண்டவர்கள் பிளேக் என்று சொல்லுகிறார்கள். மீனாக்ஷி தேகமெல்லாம் வெள்ளென வெளுத்து மெலிந்து காணப்படுகிறாள். மழை பெய்தும் விவசாயத்தைப்பார்க்க நம் வீட்டில் ஆளில்லை. இப்படியே வீடுகள் தோறும் இருப்பதனால் நேற்று; கோடாங்கியைக்கூப்பிட்டு கேட்டதில் சாமி குற்றம் என்று சொல்லுகிறான். வீட்டிற்கொரு கடா வாங்கி காளி வெள்ளிக்கு கோயிலுக்கு வெட்டப் போகிறார்கள். நம் வீட்டில் கடா வாங்கக்கூட ஆளில்லை. போகிறவர் வசம் பணமனுப்பியிருக்கிறேன். உள்ளூர்ப் பண்டிதன் மருந்து கொடுக்கிறான். ரூபாயைப் பிடுங்கித்தின்னுகிறானே அல்லாமல் அவன் மருந்தால் யாது குணமில்லை. எல்லாவற்றிற்கும் இக்கடிதத்தைத் தந்தியாய் பாவித்து உடனே புறப்படவும்.

பிரியமுள்ள
உன் தகப்பனார்,
(கிரல்—சுப்பாத்தேவன்.

ஜோ:—இராமு! என்னப்பா! உன் தந்தை இப்படி யெழுதியிருக்கிறார். நோய் வந்துவிட்டால் சாமி குற்றம் என்றுதான் உங்கள் நாட்டில் நினைப்பார்களோ? இது என்ன மூடத்தனம்! தங்கள் அறிவின்மையினாலேயே நோயை வரவழைத்துக்கொண்டு, போதாததற்கு ஒருயிரை மாய்க்கும் பாவத்தையும் ஏற்றுக்கொள்கிறார்கள். இவ்வளவிற்கும் காரணம் யாதாயிருக்கலாமென்று நீ நினைக்கிறாய்?

இரா:—நான் நினைக்கிறதென்ன? எங்கள் நாட்டில் சுத்தம் என்றால் இன்னதென்றே தெரியாது. எங்கள் நாடு எத்தகைய நாடென்று நீ கேள்விப்பட்டது கிடையாதோ?

இப்:—உங்கள் நாட்டு விஷயம் முழுவதும் எனக்குத் தெரியும். ஆனால் இப்பொழுது உங்கள் நாடு எவ்வளவோ மேன்மையுற்றிருப்பதாய் நான் பேப்பரில் வாசித்தேன்.

இரா:—இவ்வளவவ்வளவென்றா? ஆதியில் இருந்த அநாகரீகத்திற்கும் இப்பொழுதுள்ள நாகரீகத்திற்கும் அளவு சொல்ல முடியுமா?

ஜோ:—அப்படியா? அவ்வளவு கீழ்மையான ஜாதி மேன்மையுறக் காரணமாயிருந்தவர் யார்?

இரா:—இதுவும் தெரியாமலா இருக்கிறாய். காருண்ய கவர்மெண்டார் அவர்களால் எங்களுக்கு நாயகராக! (சீர்திருத்த) நியமிக்கப்பட்டிருக்கும் பிரபு ராஜாவையாவர்களே இவ்வளவு நன்மைக்கும் காரணமாவார். அவர்கள் எங்கள் வகுப்பினர்களைத் தமது குழந்தையரைப்போல் பாவிக்கிறார்கள். கீழ்வகுப்பாளர்களை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் என்ற விருப்பமே கொண்டிருக்கிறார்கள். அவர்களது பெருந்தன்மை இவ்வளவு என்று எடுத்துச் சொல்லமுடியாது. அவர்களுக்குதவியாயிருந்து இந்நாட்டின் நலத்தையே தன்னலமாகக் கருதும் எங்கள் தாலுகாபோர்டு பிரஸிடெண்டு கனம் ராவ்சாகிப் J.A. வேதநாயகத்தேவரவர்களும் உசிலம்பட்டி டிப்டி சூப்பரின்டெண்டெண்ட் மகா-ள-ள-ஸ்ரீ P. S ஜம்புராமஸ்வாமி ஐயர

வர்களும் எங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு முக்கிய காரண புருஷராவார். இவர்களாலே எம்நாடு முன்னேற்ற மடைந்ததென்று கூறவும் தடையுண்டோ?

ஜோ:—அவர்கள் செய்த நன்மைகளை ஒவ்வொன்றாய் கூறுவாயெ ன்று நம்புகிறேன்.

இரா:—ஆதியில் கொலை, களவு முதலிய தீத்தொழில்களையே புரிந்து வந்தவராகக் உலகத்தாரால் கருதப்பட்டவரும், கள்ளரென்று காரணப்பெயர் பெற்றவருமாகிய எம்வருப்பாளர்களுக்கு அவர்கள் செய்த உதவிகளை ஒவ்வொன்றாய்க் கூறுகிறேன் கேளுங்கள். எங்கள் வகுப்பார் யாவரும் கல்வி பெற்றுயாவென்று பல கலாசாலைகளை அவர்கள் எங்கும் நியமித்தார்கள். உசிலம்பட்டி என்னுமிடத்து [Kallar Boarding] என்ற ஒன்றை ஸ்தாபித்து சுமார் 50 எளிய பிள்ளைகளுக்கு அன்னமளித்து, ஹை யூர் போர்டு ஸ்கூலில் படிக்க வைத்திருக்கிறார்கள். பல தெய்வத்தன்மையளிக்கும் பாக்கள் அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. அவர்களது ஒழுக்கம் பெரிதும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. அதனை நடத்தும், அவ்வூர் உயர்தரக்கலாசாலைத் தலைமை ஆசிரியர் மகா-ா-ா-ஸ்ரீ நாராயணசாமி ஐயரவர்களது சாமர்த்தியம் வியக்கத்தக்கதேயாகும். அவர்கள் மாட்டு எம் நாடு என்றும் நன்றிபாராட்டக் கடைப்பட்டதாகும். அதுபோலவே பசுமலை, விருதுபட்டி, மதுரை முதலிய இடங்களிலும் போர்டிங் பாடசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளும் மிகவும் புகழத்தக்கவாறு நடைபெற்றுவருகின்றன. மேலும் பஞ்சாயத்துக்கள் எங்கெங்கும் ஏற்படுத்தியதுமல்லாமல் கட்டுப்படாத கள்ளர்களை எல்லாம் ஒழுங்குபடுத்திவிட்டார்கள். இப்பொழுது கள்ளர் நாடு நல்லர் நாடாய் விட்டது. எங்கள் வகுப்பாளர்மீது கருணைகொண்ட காருண்யகவர்மெண்டார் அவர்களும், அவர்களால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களும் எமக்குச் செய்யும் உதவி இன்னும் புகன்றால் விரியும்.

ஜோஸப்:— அப்படியா! (இப்ராஹிமும் ஜோஸப்பும் ஒருவருக்கொருவர் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொள்ளுகிறார்கள்.)

இப்:—ஆனந்தகரமாய் ஜனவரி 1ᵘ நாம் யாவரும் சுகவாசம் கொண்டாடவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. இத்தருணம் இராமசாமியின் ஊர் வருந்துவது தகாது. ஆதலின், இராமசாமி! இப்பொழுதே நம் மூவரும் கலாசாலைத் தலைவரிடம் ரஜா பெற்று உன் ஊருக்கு செல்வோம். சென்று வியாதிகளைக் கவனித்து, அனைவரும் சுகமுறச் செய்து அவ்வூரிலேயே அக் கொண்டாட்டத்தையும் கொண்டாட ஏற்பாடு செய்வோம்.

ஜோஸப்:—நான் சாரணனல்லவா? பிறருக்குதவி செய்வதே என் கடமை: இத்தகைய தொழிலுக்கு என் ஆணைப்படி நான் உழைக்கத் தயாராயிருக்கிறேன்

இரா—உங்களது உத்தம வாசகத்தால் மிகமகிழ்ந்தேன். எங்கள் ஊரார் உங்களை அன்புடன் நல்வரவேற்பாரென்பதுறுதி. வாருங்கள் தலைவரிடம் செல்லலாம்.

[செல்லுகிறார்கள்]

## IV. SCENE.

### இடம்:—கூடலூர் சுப்பாத்தேவன் வீடு
### காலம் முற்பகல்

பாத்திரர்:—சுப்பாத்தேவன், கருப்பத்தேவன், கருப்பாயி, மீனாக்ஷி, சொக்கலிங்கம், வேலுப்பிள்ளை, சிலஊர் ஜனங்கள், ராமசுவாமி, ஆசிரியர், ஜோஸப்; இப்ராகிம் முதலியோர்

[சுப்பாத்தேவன் வீட்டுவாசலில் உட்கார்ந்து இருக்கிறான்]

ராமசுவாமி, ஜோஸப், இப்ராஹிம், சுகாதார ஆசிரியர், நால்வரும் வருகிறார்கள்.

சு:—(ராமசுவாமியைப்பார்த்து)ஐயா, வா! சௌக்கியமா? (திரும்பி) அவர்கள் யார் தெரியவில்லையே.

இரா:—ஐயா! (இப்ராஹிமையும் ஜோஸப்பையுங்குறித்து) இவர்கள் எனது நண்பர்கள். (ஆசிரியரைக்குறித்து) இவர்கள் தாம் எனக்கு சுகாதாரத்தை கற்பிக்கும் ஆசிரியர். இவர்கள் எல்லாம் உங்களைப்பார்க்கும் நோக்கத்துடனும், ஊரில் வியாதிகளை நீக்கி, வரும் ஜனவரிமீத்தில் சுகவாரத்தை நம் ஊரில் கொண்டாடச்செய்யவும் வந்திருக்கிறார்கள். வீட்டில் குழந்தைகள், என் தாயார் முதலியவர்கள் சுகமாயிருக்கிறார்களா? உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?

சு:—அப்படியா! ரொம்ப சந்தோஷம். (மற்றவர்களைநோக்கி) ஐயா வாருங்கள். (ராமசாமியைபார்த்து) அப்பா உள்ளேபோய் இவர்கள் உட்கார பலகை யெடுத்துவா.

[ராமசாமி ஒரு பலகையை யெடுத்துவந்து அவர்களை அமரச்செய்கிறான்.]

சு. ஆ:— (மூக்கைத் துணியினால் மூடிக்கொண்டு) (ஆங்கிலத்தில்) என்ன ராமசாமி உன்வீடு மிக அசுத்தமாயிருக்கிறதே! வாயிலிலிருக்கும் அங்கணத்தில் அசுத்தஜலம் இருக்கும் காரணத்தால் கொசுக்கள் மொய்த்துக்கொண்டிருப்பதைப்பார்.

சா:—ஐயா! நான் அப்பொழுதே சொல்லவில்லையா! எங்கள் ஊர் இப்படித்தான் இருக்குமென்று. தங்களால் தான் இனி இவ்வூர் திருத்தமடையவேண்டும்.

சு:—ஆமாம் ஐயா! எங்களுக்கு என்னதெரியும்-எல்லாம் உங்களைப் போல் படித்தவாகள் வந்து, சொன்னால்தானேதெரியும்.

சு. ஆ:—(ராமசுவாமியைப்பார்த்து) ராமசுவாமி! ஐயாவுக்கு என்ன சிக்கு என்று, வந்தவுடன் நீ விசாரிக்கவில்லையே. (சுப்பாத்தேவனை நோக்கி) ஐயா தங்களுக்கு என்ன செய்கிறது?

சு:—நேற்று! இந்தப்பொழுதுக்கெல்லாம் ஜுரம்போட்டு அடித்தது. இன்று விட்டிருக்கிறது. கைகால்களிலெல்லாம் வலிபொறுக்கக்கூடவில்லை. இவ்வூர் வைத்தியன் நேற்று ஜன்னிபிறந்துவிட்டதென்று கூறி ரூபாயைப் பிடுங்கிச்சென்றான். இப்பொழுது யாதொரு மருந்துமில்லாமலே கொஞ்சம் குணமாயிருக்கிறது. வழக்கம்போல் நாளைவந்து விடுமோ வாராதோ தெரியவில்லை. வீட்டில் கஞ்சிவைத்துக்கொடுக்கக்கூட ஆளில்லை.

சு. ஆ:—(ராமசுவாமியைப்பார்த்து) இராமசுவாமி! இதென்னவென்று கூறுபார்ப்போம்.

ராம:—என்தந்தை சொல்வதையும், அருகில் கொசுமொய்த்துக்கொண்டிருப்பதையும் காணும்பொழுது.

இப்:—மலேரியா—என்மலேரியாதான்—நிச்சயமாய்ச்சொல்லலாம்.

சு. ஆ:—அஃதேதான். கால்கைகளில் உளைச்சல் இருப்பதாய்க் கூறுகிறார் (சுப்பாத்தேவனைநோக்கி) காய்ச்சலுடன் குளிரும் உண்டோ?

சு:—அதையேன் சொல்லுகிறீர்கள்; தேகமெல்லாம் குளிரால் நடுங்கிற்று. ஏன் என்படுக்கையும் அசைந்ததென்றே சொல்லுவேன்.

சு. ஆ:—அப்படியாயின் இது மலேரியா ஜுரம் தான் நிச்சயம். எங்கே ராமசாமி! மலேரியா ஜுரத்தைப்பற்றி நான் உபந்நியாசத்திற் கூறியிருக்கிறேனே. இவர்கள் மனதிற்படும்படி யெடுத்துக்கூறு.

இரா:—ஐயா! இந்த ஜுரம் பெரும்பாலும் கோடைகாலத்திலும் அது கழிந்தபின்னரும் உண்டாகும். இது ஒருவகைக்கொசுவால் விளையும்நோய். கொசுக்களை ஜனங்கள் சாமான்னியமாய் நினைக்கிறார்கள். அவைமனிதனுடைய ஜன்மவிரோதிகளாகும் இக்கொசுக்கள் நமது வாசலிலிருக்கும் சாக்கடைபோன்ற அசுத்தமான இடங்களில் வசித்து, அருகில் மனிதன்

மீது வந்து அமர்கின்றன. அப்பொழுது அவை ஒருவகை விஷத்தை மனிதனுடலுட் செலுத்துகின்றன. அவ்விஷமே இந்த ஜுரத்தை விளைக்கின்றது. இவ்விஷம் மனிதன் கழிக்கு மலங்களின் மூலம் வெளியேறியவுடன் ஜுரம் விடுகின்றது. பின்னரும் விளையும் விஷத்தால் ஜுரம் திரும்புகின்றது. இத ஞலேயே இதனை நாம் விஷஜுரம் என்கிறோம். இவ்வியாதி கொண்ட ஒரு மனிதன் மண்டையிடி கைகால் உளைச்சல், குளிர் ஜுரம் முதலியவற்றால் வருந்துகின்றான் அப்பொழுது அவன் தன் உடல் வலிமை முழுதையும் இழக்கின்றான். அக் கொடும் ஜுரமே இப்பொழுது தங்களைப்பற்றியிருக்கிறது.

சு:—ஐயா! இதற்கு மருந்தொன்று மில்லையா?

சு. ஆ:—ஏன் இருக்கிறது. அம்மருந்து அதிகச்செலவில்லாமலே கிடைக்கும். தபாலாபீஸ்களிலும், ஆஸ்பத்திரிகளிலும் அது கிடைக்கும். அதுதான் கொய்னு என்று சொல்லப்படுகிறது. அதைவாங்கி உட்கொண்டால் இந்நோய் நீங்கும்.

சு:—அப்படியா? ஐயா இந்நோய் வராமல் தடுக்க யாதாவது வழி யில்லையா?

சு. ஆ:—ஏன் இல்லை. எத்தனையோ வழிகள் உண்டு. முதலில் வீடு முழுதும் இம்மாதிரி வைத்துக்கொள்ளாமல் சுத்தமாய் வைத் துக்கொள்ளுதல் ஒன்று. அசுத்தமான அக்கணங்களே அவை வாழ்வதற்குற்ற இடங்களாயிருக்கின்றன அவைகளைச்சுத்த மாக வைத்துக்கொண்டால் இந்நோய் வராது. கண் மூக்குமுத லிய அவயங்களில் அசுத்தமிருந்தால், மனிதன் மீது கொசுக் கள் வந்தமர்கின்றன. எப்பொழுதும் குளித்து சுத்தமாயிருப் பவனிடமும், விசிறிமுதலிய பொருள்களைக்கொண்டு அடிக் கடி வீசிக்கொண்டிருப்பவனிடமும் இக்கொசுக்கள் அணு கமாட்டா இவைகளும் மலேரியா ஜுரம் இருக்கும் மிடங்களி லும் கொசுக்கள் வாழும் சதுப்பு நிலங்களிலும் வாழாமையுமே இந்நோயை வராமல் தடுக்கும் உபாயங்களாகும். இது தொ த்து நோயாதலால் இந்நோய் கொண்ட மனிதனை மற்றவர் அணுகலாகாது.

சு:—ஒருசந்தேகமல்லாவா வந்து விட்டது. கேட்கிறேன். இப்பொழுது என்னருகிலிருந்தால் தங்களுக்கும் இந்நோய் வந்துவிடுமோ?

சு. ஆ:—ஆம் சந்தேகமில்லை. ஆனால் நாங்கள், எம் கைவசமிருக்கும் கொய்னவில் சுமார் 5 கிரெய்ன் அளவு உட்கொண்டு அதனை வாராமல் தடுத்துவிடுவோம்.

சு:—நோய் இருக்கும் ஊரில் நோய் வருவதற்கு முன்னும் அம் மருந்தையுட் கொண்டால் நலம் அல்லவா.

சு. ஆ:— ஆம்.

## கருப்பத்தேவன் கால்கட்டுடன் நொண்டி நடந்துவருகிறன்.

கருப்:— (இராமசாமியைப் பார்த்து) வா அப்பா! சுகமாயிருக்கிறயா? (சுப்பாத்தேவன் அருகில் அமர்கிறன்).

இரா:—தங்களுக்கு என்னநோய்!

கருப்:—என்னசொல்லச்சொல்கிறய். நரம்புச்சிலந்தி. நாலுமாதமாயிற்று நடமாட்டம் இல்லை. இன்றுதான் உன் குரல்கேட்டு எழுந்துவந்தேன். வேதனைபொறுக்கமுடியவில்லை. அவர்கள் யார்?

இரா;— சின்னையா! இவர்கள்தாம் எமக்கு வைத்தியம் கற்பிக்கும் ஆசிரியர். இங்கு ஊரில் நோய் பரவியிருப்பதாக ஐயா அவர்கள் எனக்கெழுதிய கடிதத்தால் மனம் வருந்தி நோயைத் தீர்க்க வந்திருக்கிறர்கள்.

(சு. ஆ வைபார்த்து)

கருப்;— ஐயா வாருங்கள். இந்தப்படிநோய்க்கு ஏதேனும் மருந்துண்டா கூறுங்கள். என்னசெய்வதென்றே எனக்குத்தெரியவில்லை.

ச. ஆ:—ஐயா! இந்நோய் மிகக்கொடியது. தாங்கள் எங்கேனும் அழுக்கடைந்த கிணற்று நீரை உபயோகத்தீர்களா?

ச:—சில மாதங்களுக்கு முன் வெள்ளையன் தோட்டக் கிணற்றில் குளித்துவந்தேன்.

ச ஆ—சரிதான். பின் அதுதான் இந்நோய்க்குக் காரணம். இந்நோய் ஓர் வகைப்புழுவினால் உண்டாகிறது.

சருப்—எல்லாம் பூச்சியும் புழுவும்தானோ? அப்பொழுது அண்ணாச்சிக்கும் கொசுவினால் உண்டாயிற்றென்றீர்கள்.

இரா—சின்னையா உங்களுக்கொன்றும் தெரியாது. அவர்கள் கூறுவதை நன்கு அமைதியாயிருந்து கேட்டுக்கொள்ளுங்கள்

ச ஆ—இப்புழுக்கள் அழுக்கடைந்த நீரிலேயே வாழ்கின்றன. பின் அவை குளிக்கவோ நீர் அருந்தவோ வந்து அந்நீரை உபயோகித்தவர் உடலுட்சென்று நாளடைவில் இந்நோயை விளைவிக்கின்றன உடலின் எப்பாகத்திலும் அது நோயை விளைவிக்கலாம். ஆயினும் பெரும்பாலும் கால்களிலேயே வந்து, மேல் தோலின் அடியிலுள்ள மிருதுவான சர்மத்தில் வாழுகின்றன

சுப்—அப்படியா (ஆச்சரியப்படுகிறார்கள்)

ச. ஆ;—பின் இப்புழு தன் வாலால் மேல் தோலைத் தொளைக்கின்றது. அப்பொழுது ஒருசிறு கொப்புளம் காணப்படுகிறது. பின் அது சிரங்காகமாறி மிகுந்தவேதனையை யளிக்கிறது. இந்நோய் காரணமாகவே உடலில் சிரங்குகளும் உண்டாகின்றன இப்புழு பால்போன்ற வெண்மை நிறமுடையது. பார்வைக்கு ஒருவெள்ளை நூலைப்போலவே யிருக்கும். முழுவகைச்சியடைந்த ஒரு புழு ஒரு கஜ நீளம் இருப்பதாகச்சொல்லுகிறார்கள்.

ச:—ஆமாம் ஐயா! இந்நோய்க்கு ஏதேனும் மருந்துண்டோ?

ச. ஆ:—மருந்தென்ன! அப்புழுவை வெளியில் எடுத்துவிடுவது தான் உற்றவழி. அதற்கு பலவகைகளுண்டு. புண்ணைப்பிது

க்கி மெல்லமெல்ல அப்புழுவை முழுதும் வெளியிலெடுத்து விடுவதென்று நாட்டுவழக்கப்படியும் குச்சியில் அதனைச் சுற்றிக்கொண்டே இழுத்து விடுவதுமற்றொன்று. இவ்வாறு எடுப்பதில் அதிக ஜாக்கிரதை வேண்டும். இடையில்அறுந்து விடுந்தன்மையுடையதாய் அப்புழு இருப்பதால் அவ்வாறு இழுக்கும்போது சீனிக்காரத் தண்ணீரை அதன்மேல் ஊற்ற வேண்டும். அவ்வாறுசெய்வதால் புழு அறுந்து விடாத வலிமையடைகிறது. அப்புழு அறுந்துவிட்டால் அபாயம்ஏற்படலாம். ஆதலால் தான் அவ்வாறுசெய்வதில் ஜாக்கிரதைவேண்டும் என்றேன்.

கருப்—முன் மலேரியாவிற்குச் சொன்னீர்களே அதுமாதிரி! இதனைத்தடுப்பதற்கும் ஏதேனும் வழியுண்டோ.

ஆ—பல உண்டு. அவையாவன. பலர் இறங்கி அசங்கியப்படுத்துவதால் இப்புழுக்கள் வாழ இடமாயுள்ளபடிவைத்த கிணறுகளில் இறங்கிக் குளிக்கக்கூடாது. அந்நீரைக் குடி நீராய் உபயோகிக்கவும் கூடாது. வடதேசத்தாரைப்போலவே, சுவருள்ள கிணறுகள் கட்டி, அவற்றின் நீர் அசுத்தமாகாமல் பாதுகாப்பதுடன், கயிற்றில் செம்புகளைக் கட்டி அவற்றில் நீரெடுத்து உபயோகித்து வந்தால் இந்நோய் வராது. இவ்வழக்கம் நம் நாட்டில் இல்லாமற் போய் விட்டது. ஆதியில் நமது முன்னோர்கள், பிரயாணிகள் செம்பும் கயிறும் கொண்டு செல்லவேண்டும் என்று கூறியிருப்பது இதனாலேயேயாகும்.

இரா—ஐயா! குழந்தை சொக்கு எங்கே படுத்திருக்கிறான்?

ஆ:—அவனுக்கு அளவு கடந்த ஜுரமடிக்கிறது. மேலெல்லாம் கட்டிபுறப்பட்டுஉடைகிறது. கண்டவர்கள் பிளேக் என்று சொல்லுகிறார்கள். வாருங்கள் உள்ளே போகலாம்.

[எல்லோரும் உட் செல்லுகிறார்கள்.]

ஆ:—பையனைப் பார்த்து
ராமசாமி! ஒரு வீட்டில் எத்தனை நோயப்பா! பையனுக்கு வியாதி முற்றிவிட்டதே. மலைத்து நிற்கிறார்.

ராம:—மிகுதியான துக்கத்துடன் யாதும் பேசாமல் முகத்தில் கைவைத்து நிற்கிறான்.

சு ஆ:—(சுப்பத் தேவனைப் பார்த்து) உங்கள் அஜாக்கிரதையினாலே யே இந்நோயை எல்லாம் வரவழைத்துக் கொண்டீர்கள்.

சு:—சாமிக்குக் கடாய் வெட்டுவதாயும் தீர்மானித்து விட்டோம். இன்னும் தான் என்ன செய்வது.

சு ஆ:—(சுப்பத்தேவனை நோக்கி) என்ன ஐயாசுவாமி என்ன செய்வார் உங்கள் மூடத்தனத்தால் நீங்கள்நோயை வரவழைத் துக் கொண்டால்? இந்நோய் பிளேக் தான் நிச்சயம். வியாதி யும் முற்றிவிட்டது.

சு:—என்னமோ! எங்கள் நல்ல காலத்திற்குத்தான் தாங்கள் வந் தீர்கள். பையன் உங்களால் தான் பிழைக்கவேண்டும். பி ளேக் என்றால் இன்னதென்று கூட எங்களுக்குத் தெரியாது. எங்கள் மூதாதையர்கள் இந்நோய்களைப் பற்றிக் கேட்டும் அறியார்கள் சாமி குற்றத்தினால் தான் இத்தகைய புதுநோய் களெல்லாம் விளைகின்றன.

இப்:—(ஆசிரியரை நோக்கி) ஐயா. இவர்கள் யாதுமறியாதவர்கள். இவர்கள் மனத்தில் பதியும் படிநான் பிளேக் நோயைப் பற்றி யுரைக்க அநுமதி கொடுக்க வேண்டும்.

சு ஆ:—ரொம்ப சந்தோஷம் என் சிரமத்தை நீக்கினாய். அப்படியே செய்

இப்:—தேவரவர்களே! பிளேக்கைப்பற்றிக் கூறுகிறேன்கேளுங்கள். இது தன் கொடுமையால் கொள்ளை நோய் என்று சொல்லப் படுகிறது, சாதாரணமாய் எல்லா வீடுகளிலும் சஞ்சரிக்கும். எலிகளாலேயே இந்நோய் விளைகின்றது. இப்பிளேக்கை உண்டாக்கும் தெள்ளுப்பூச்சிகள் முதலில் எலிகளையே பற்று கின்றன. பின் அவ்வெலிகள் இறந்துவிட தெள்ளுப்பூச்சி அவற்றினின்றும் வெளியேறி மனிதரைப்பற்றுகின்றன. பின் அம்மனிதன் வியாதியால் அவஸ்தைப்படுகிறான்.

சு:—அப்படியா! எலிபா இதற்குக் காரணம். பின் வியாதி எவ்வாறு ஊர் ஊராய்ப் பரவுகிறது.

இபு:—சொல்லுகிறேன் கேளுங்கள். பின் அவ்வாறு அந்நோய் விளைந்த ஊரிலிருந்து சாமான்களை வியாபாரிகள் மூட்டைகளில் வைத்தனுப்பும் பொழுது அவ்வியாதிப் பூச்சிகளும் அவற்றுடன் அனுப்பப்படுகின்றன. மேலும், அவ்வூர்களிலிருந்து நோய் கொண்ட மனிதர்கள் பிற ஊர்களுக்குப்போகும்போது தங்கும் ஊர்களில் இந்நோயைப் பரவச்செய்கிறார்கள்

வேலு:—சரிதான் (சுப்பாத்தேவனைப் பார்த்து.) தேவாரத்திலிருந்து சோளம் வாங்கி வந்தாயல்லவா? (மண்டையை ஆட்டுகிறான்.)

இப்:—தேவாரத்தில் அந்நோய் உண்டா?

வேலு:— தினத்திற்கு ஆறுக்குக்குறையாமல் பிரேதங்கள் சுடுகாட்டில் எரிகின்றன.

இப்.—பார்த்தீர்களா? ஆதலால் மிகுந்த ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும். அந்நோய்கள் பரவியிருக்கும் இடங்களிலிருந்து சாமான்கள் இவ்வூருக்கு வராமல் தடுக்கவேண்டும். திருட்டுத்தனமாய் வாங்கிவரும் வியாபாரிகளையும் தக்கபடி சிக்ஷிக்க வேண்டும். அவ்வூரிலிருந்து மனிதர்கள் இங்கு வரலாகாது இங்கிருந்து அங்கு போகவும் கூடாது. அப்படியிருந்தால் இந்நோய் பரவாது.

சு:—அதிருக்கட்டுமையா? இங்கு இப்பொழுது பிளேக் வந்துவிட்டதே இனிச் செய்ய வேண்டிய உபாயம் என்ன கூறுங்கள் ஐயா?

இப்:—சொல்கிறேன் கேளுங்கள். உங்கள் வீட்டில் முதல் முதல் பிளேக் கண்டிருக்கிறது. நீங்கள் இனிச்சிறிதும் தாமதம் செய்யாமல் வீட்டைக்காலி செய்து விடவேண்டும். பின் ஒரு மாதம் கழித்து வீட்டைச் சுத்தம் செய்த பின்னரே இங்கு வரலாகும். இப்பிளேக் நோயை தடுப்பதற்கு காரு



சென்னை-600 003
166164

ண்ய கவர்மெண்டாரவர்கள் ஒரு வழிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது பிளேக் அம்மை குத்திக் கொள்ளுகலேயாகும். இதற் குரிய அம்மைப்பால் பிளேக் பூச்சிகளிடம் இருந்தே தயாரிக்கப்படுகிறது. இவ்வம்மை குத்திக் கொண்டால் இந்நோய் வாராது வந்தாலும் உயிர்ச்சேதம் விளைவிக்காது. நம்நாட்டார் இவ்வம்மைப் பாலின் அருமையை உணராமல் அதனைக் குத்திக்கொள்ள மறுக்கிறார்கள். இது பெரும் பேதமையாகும். அன்றியும் இவ்வம்மை குத்திக் கொண்ட அநேகர் முன் தம் தேகத்திலிருந்த பலநோய்கள் நீங்க சுகமாய் வாழுகிறார்கள். ஆதலின் நீங்கள் சிறிதும் தாமதியாமல் இவ்வம்மை குத்திக் கொள்ள வேண்டும். இவைகளே இப்பிளேக்கை வராமல் தடுப்பதற்கு வழிகளாம்.

க:—(சுப்பாத்தேவனைப்பார்த்து) அண்ணே! பார்த்தியா கேவலம் எலிகளால் விளையும் தீங்குகளை, இதெல்லாம் நமக்கு என்னமாத் தெரிகிறது.

சு. ஆ:—ஐயா! இது மட்டுமல்ல எலிகள் எந்த வழியிலும் மனிதனுக்கு விரோதிகள் தாம் நம் நாட்டில் சுமார் 40 கோடி ஜனங்கள் இருப்பதாய் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு மனிதனுக்கு 2 எலி விதம், நம் நாட்டில் 80 கோடி எலிகள் இருக்கின்றனவாம். ஒரு எலி ஒரு வருஷத்திற்கு நான்கு ரூபாய் பெறுமான பொருளைச் சேதப்படுத்துகின்றது. அவ்வாறு எண்பது கோடி எலிகளும் மூந்நூற்றிருபதுகோடி ரூபாய் நஷ்டத்தை நம் நாட்டிற்கு விளைக்கின்றன. ஒரு பெண் எலி வருஷத்திற்கு ஆறுமுறைக்கு குறையாமல் குட்டி போடும். அப்படியானல் எலிகளின் பெருக்கத்தையும் பொருட் சேதத்தையும் கவனியுங்கள். கள்ளத்தராசு கொண்டு பொருள் விற்கும் வியாபாரிகளும், தம் வயிற்றுக்கும் உண்ணுமல் பொருள் சேர்க்கும் சமுசாரிகளும் ஐயகோ அநியாயமாய் இவ்வெலிகளால் ஏமாற்றப்படுகின்றனர்.

எல்லோ:—(ஆச்சரியத்துடன் மூக்கில் விரல் வைத்து ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள்)

வேலு:—(சுப்பத்தேவனை நோக்கி) அப்படியானுல் எலிகளில் ஒன்றைக்கூட விடாமல் வேட்டையாடி விடவேண்டும். அப்படியானுல் இவ்வியாதிவராதல்லவா?

சு:—கண்ணுடிச்சில்களை கலந்து சேற்றைத் தூவினுல் எலிகள் தின்று மடிகின்றன. இவ்வளவுதானே.

இப்:—நீங்கள் கூறுவதும் ஒருவழிதான் என்றுலும் அதைக் காட்டிலும் சிறந்த வழி ஒன்றுண்டு. கண்ணுடி அல்லது விஷம் கலந்த சேற்றையுண்டு எலி பொந்துகளிற் போய் மடிந்து விட்டால் வீடு முழுதும் விசும். ஆதலால் பொறிகளால் எலிகளை பிடித்து மாய்ப்பதே தகுதியாகும் அவ்வாறு எவரும் எலிகளை மாய்த்து வந்தால் இந்நோய் வரவே வராது.

சு:—அப்படியே எங்கள் வீட்டை இன்று காலி செய்து விடுகிறோம். ஊர்ப்பஞ்சாயத்தில் எலிப்பொறிகள் வாங்கி எலிகளைப் பிடிக்கவும் ஏற்பாடு செய்கிறோம். அவ்வம்மை குத்திக் கொள்ளும் மருந்து தங்களிடம் இருக்கிறதா ஐயா!

சு. ஆ:—ஆம் தயாராய் வைத்திருக்கிறோம். நாளை ஊர் முழுவதும் அம்மை குத்திக் கொள்ளலாம்.

எல்:—நீங்கள்தான் எங்கள் தெய்வமய்யா.

மீனுக்ஷிவருகிருள்,

மீ:—(இராமசாமியைப்பார்த்து) தம்பி! வா. சுகந்தானு?

இரா:—என்ன அக்காள் இப்படியாய்விட்டாய். கர்ப்பிணியாகிய உனக்கு இந்நோய் எங்கிருந்து உண்டாயிற்று.

சு:—ஊர்ப்பண்டுதன் காமலை முற்றி சோகைக்கட்டி போட்டு விட்டதாய் கூறுகிருன்.

இரா:—(சுகாதார ஆசிரியரைப் பார்க்கிருன்)

ச. ஆ:—ராமசுவாமி! இது கொக்கிப்புழுநோய். அவர்கள் சொல்லு
கிறபடி காமாலையல்ல.

சு:—அப்படியா? அது என்ன நோய் ஐயா? புதிது புதிதாக இருக்
கிறதே.

ச. ஆ:—ஐயா! இஃதும் ஒருவகைப் புழுவினாலுண்டாவதே யா
கும். இந்நோய் கொண்ட ஒருவன் கழித்த மலத்தில் இப்
புழுவின் முட்டைகள் ஏராளமாய் காணப்படுகின்றன. பின்
அவை புழுக்களாகி அம்மலத்தை மிதிப்பவரது கால் விரல்
களில் இடுக்குகளின் வழியாய் உடலுட்புகுகின்றன.

சு:—சரிதான் அப்புழுவினால் சேற்றுப்புண் உண்டாகிறதோ என்
சில நாட்களுக்கு முன் அதனால் வருந்தினாள்.

ச. ஆ:—ஆம் ஆம்! சேற்றுப்புண் வந்தால் இந்நோய் வரும் என்
பது அநேகமாய் நிச்சயம்.

கரு:—ஆச்சரியம்! பிறகு.

ச. ஆ:—மற்றப் புழுக்களைப் போன்று இராமல் இப்புழு உடலுட்ச்
சென்றதும், நேரே சிறு குடலுக்குச் சென்று, தனக்கு வேண்
டிய இரத்தத்தைக் குடித்து மீதியை சேதப்படுத்து கிறது.
அதனால் அந்நோயாளி கழிக்கும் மலத்திலும் குருதி காணப்
படுகிறது.

சு:—சரிதான் நீங்கள் சொல்வதெல்லாம் சரியே.

கருப்:—ஏனையா? பிளேக்குக் குத்திக்கொள்வது போல் இதற்கும்
ஏதாவது அம்மை குத்திக்கொள்ள வேண்டுமோ?

ச. ஆ:—இல்லை, இல்லை. இதற்கு ஒரு மருந்திருக்கிறது. அது
மிகச் சுலபமானது.

சு:—சொல்லுங்கள் ஐயா

சு:—ஓமக்கஷாயமே இதற்கு உற்ற மருந்தாகும். ஓமத்திற்கு
அப்புழுக்களை மாய்க்கும் திறமை யுண்டு. ஆதியில் நமது

பெரியவர்களெல்லாம் வெகுதூரம் நடந்து சென்று மனிதர்கள் சஞ்சரிக்காத இடங்களில் மலங்கழித்து வந்தார்கள் இப்பொழுதோ நடுத்தெருக்களிலும்கூட பலர் மலங்கழிக்க நான் கண்டிருக்கிறேன். பிறர் கழித்த மலங்களை மிதிப்பதனாலே இந்நோய் விளைகின்றது ஆதலால் நம்மவர் அது விஷயத்தில் அதி ஜாக்ரதையுடன் இருக்கவேண்டும்.

சு:—அது தானே இந்தப் பட்டிக்காட்டு ஜனங்களுக்குத் தெரிவதில்லை.

ச. ஆ:—இது வரை தெரியாவிட்டாலும் இனியாவது தெரிந்து ஒழுகுங்கள். க்ஷேமமடைவீர்கள்.

சு:—(இராமசாமியை நோக்கி) உன் தாய் படுத்தப்படுக்கையிலிருக்கிறாள். இவர்களை அழைத்துப்போய்க் காண்பிப்போம் வா.

[எல்லோரும் மற்றோர் அறைக்குச் செல்லுகிறார்கள்]

(கருப்பாயி நலைச்சொரிந்த வண்ணமாய்ப் படுத்திருக்கிறாள்)

இரா:—அம்மா! கூடுமானல் எழுந்து உட்கார்.

[கருப்பாயி எழுந்து உட்கார முடியவில்லை என்று சைகை காட்டுகிறாள்].

ச. ஆ:—முகத்தையும் ஆடைகளையும் உற்று நோக்கி (இராமசாமியை நோக்கி) (ஆங்கிலத்தில் இது தான் பிலேப்பேன் ஜுரம்

ராம:—(தகப்பனை நோக்கி) ஆம். ஆம்.

கருப்:—பேனுக்ளுக்குக்கூடவா இந்த சக்தியுண்டு.

இரா:—நாம் எவ்வெவற்றை சாதாரணம் என்று இகழ்கிறோமோ அவைகளே நமக்கு ஜன்மவிரோதிகளாகின்றன.

(எல்லோரும் ஆச்சரியப்படுகிருர்கள்.)

இரா:—ஐயா இப்பேன்கள் கடிப்பதனுல் ஒரு வகை விஷம் மனித சரீரத்துட்புகுந்து இந்த ஜுரத்தை விளைவிக்கின்றது. இதற்கு வேறு மருந்து கிடையாது. இந்நோய் கொண்டவர்கள் குணமடைய வேண்டுமானுல், உடனே தலையை மொட்டைபடித்துக் கொள்ள வேண்டும். அணிந்த ஆடைகளை எல்லாம் நன்கு துவைத்து உலர்த்திய பின்னரே அணிய வேண்டும். மிகுதியாகப் பேனுள்ள ஆடைகளை எரித்து விடவேண்டும். சுத்தமாயிருந்தாலே இதற்குள்ள மருந்து.

சு. ஆ:—இராமசாமி! சிறிதும் தாமதமில்லாமல் முதலில் உன் வீட்டு வாயிற்புறமுள்ள அங்கணத்தைச் சுத்தம் செய்து பின்னர் இவ்வீட்டை காலி செய்ய வேண்டும் தாமதித்தால் பிளேக் மலேரியாவும் ஊர்முழுவதும் பரவிவிடும்.

ராம:—அவ்விதமே செய்கிறேன். (வெளிச் செல்லுகிறுன்)

சு. ஆ;—(சுப்பாத்தேவனை நோக்கி) சிறிதும் தாமதமின்றி வீட்டை காலி செய்து வேறேதேனும் ஊர்புறத்தில் குடிசை இயற்ற ஏற்பாடு செய்யுங்கள். நான் மருந்து கொடுக்க வேண்டிய விஷயங்களைப் பின்னர் கவனிக்கிறேன்.

சு:—ஐயா! நமது தோட்டத்தில் முன்னுலேயே ஒரு குடிசை கட்டியிருக்கிறுன். அங்கு சென்று விடலாம். எங்கே.

(இராமசுவாமி வரவு.)

(சுகாதார ஆசிரியரை நோக்கி) ஐயா! இவ்வூரில் ஒற்றுமையைப் பாருங்கள்! ஊர் நலத்திற்காக அங்கணத்தைச் சுத்தம் செய்யச் சொன்னேன். ஒருவரும் வரமுடியாதென்று மறுத்து விட்டார்கள்.

ஜோஸப்:—ஏன் ராமசுவாமி! நான் சாரணனல்லவா தயாராயிருக்க வேண்டியதும், எப்பொழுதும் பிறருக்கு உபகாரம் செய்ய

வேண்டியதும் என் கடமை யல்லவா? இதனால் எனக்கு இழிவில்லை இதோ நான் சுத்தம் செய்கிறேன்.

ராம:—நானும் உடன் வருகிறேன்.

(இருவரும் அவ்விடத்தைச் சுத்தம் செய்கிறார்கள்)

ஆசிரியர்:—(வெளிவந்து) இராமசுவாமி! சீக்கிரம் வீட்டைக்காலி செய்ய ஏற்பாடு மற்ற வீடுகளிற் போய்க் கவனித்து வருவோம் மேலும் எல்லாவற்றையும் கவனித்தபின் இங்கு ஓர் உபந்நியாசம் செய்ய விரும்புகிறேன். உனது அபிப்பிராயம் என்ன?

இரா:—அப்படியே செய்வோம்.

(திரைவிடவும்)

:o:

இடம்—கூடலூர் மந்தை.
காலம்—பிற்பகல்

பாத்திரர்:—ஊர்ஜனங்கள் சுகாதார ஆசிரியர் இப்ராஹீம், ஜோஸப், இராமஸ்வாமிமுதலியவர்கள்.

இராமஸ்வாமி:—சகோதரர்களே! இங்கு அமர்ந்திருக்கும் கனம் தங்கிய ஆசிரியரவர்கள் தங்கள் சொந்தநலங்களையும் பாராட்டாது உங்கள் மகிழ்ச்சியையே கருதி இங்குவந்திருக்கிறார்கள் அவர்கள் நெகிழ்ந்த அன்பின் மிகுதியால்தற்போழ்து தங்களுக்கு உரைக்கும் வாய்மொழிகளை உங்கள்தாய் மொழியாகவே கொண்டு அவற்றிற் கேற்பஒழுகிவருவீர்களென்றும் நம்புகிறேன்.

நமது ஊரில் சுத்தம் என்பது இல்லாதகாரணத்தினாலேயே இந்நோய்கள் புகுந்தன. நேற்று நான் வந்தவுடன் எங்கள் வீடு இருந்த ஒரு நிலை மிகவும் அபாயகரமாயிருந்தது. உங்களில் பலரை வீடு சுத்தம் செய்வதற்காக அழைத்தேன். ஆயினும் என்னகார

ணத்திலோ நீங்கள் ஒருவரும் வரவில்லை. பின் சாரணரும் எம் நண்பருமாகிய ஜோஸப் அவர்களும் நானுமாக வீடு முழுவதையும் சுத்தம் செய்தோம்! மேலும் பலவிஷப் பூச்சி புழுக்கள் வாழ இடமாயிருக்கும் எமது வீட்டைக்காலிசெய்து தோட்டத்திலுள்ள ஒரு குடிசையில் வாழ்கிறோம். இவற்றின் காரணங்களையும் இன்றும் வியாதிகளைப் பற்றிய பலவிஷயங்களையும் எனது அன்பார்ந்த ஆசிரியரவர்கள் உங்கட்குரைப்பார்கள்.

கதிர்:—என்ன தம்பி! என்ன எல்லாமோ வீசுகிறாயே ஆதியில் தமது மூதாதையரெல்லாம் சம் சாரிகளாகத்தானே இருந்திருக்கிறார்கள். அவர்கள் சுத்தமில்லாமலா வாழ்ந்தார்கள். அவர்களுக்கு எல்லாம் இந்நோய்கள் வந்தனவா? மெத்தப்படித்தவரும்யல்லவா பேசுகிறாய்; கோடாங்கி பூசாரி சொல்வது தான் என் மனதிற்கியைந்திருக்கிறது. நமது ஆதிவழக்கத்தைவிட்டுவிட்டால் மென்மேலும் சுவாமி குற்றம் ஏற்படும். அப்பொழுதியார் என்ன செய்வார்கள்.

இப்:—ஐயா! தாங்கள் சொல்வது சரிதான் நமது மூதாதையர் எப்பொழுதும் சுத்தமாகவேயிருந்தார்கள். அவர்கள் தினந்தோறும் தங்கள் சாஸ்திரங்களின் மொழிப்படி ஒழுகிவந்தார்கள். உலகத்தில் சாஸ்திரங்கள் ஏற்பட்டதேன்? சுகத்திற்காகவே சாஸ்திரம் எனப்பல பெரியோர்கூற நான் கேட்டிருக்கிறேன். வைகறைத்துயிலெழுதலும், வழிநடந்து மலங்கழித்தலும் பல்தேய்த்து குளித்து பூஜை, வழிபாடு செய்தலும் எதற்காக ஏற்பட்டன? நமது மூதாதையர் அழுக்கடைந்த ஆடைகளைத் தெரித்ததும் இல்லை; அதா அன்று வண்ணாரிடம் வஸ்திரங்களைப்போடுவதும் இல்லை. 'தன்கையே தனக்குதவி, என்ற முது மொழியின்படி எப்பொழுதும் நடந்து வந்திருக்கிறார்கள்.

அவர்கள் குளித்து ஒரு கிணறு; குடிஜலம் எடுத்தது மற்றொருகிணறு; பிறவிஷயங்களுக்கு உபயோகித்தது வேறு. எவ்விதங்களிலும் மனோவாக்குக் காயசுத்தராய் வாழ்ந்த அவர்களைப்போல் நாமும் ஒழுங்காய் நடந்து வரின் இந்நோய்கள் புக இடமில்லாமற் போய்விடும்.

'சுத்தம் சோறிடும்,' என்ற பழமொழியால் அவர்கள் சுத்தமாயிருந்தாலொழிய உண்டதில்லை யென்பது விளங்கும். கடவுள் வழிபாட்டிலும் சுத்தவழிபாடே உயர்ந்த தென்றார் ஒரு புலவர். மாடு ஆடுகளை அடைப்பதற்கு அவர்கள் தனித்தனி சுத்தமான கொட்டங்கள் அமைக்கவில்லையா? இப்படியா உங்களைப் போல் வாழ்ந்தார்கள்; உங்கள் சாஸ்திரங்களிற் கூறியிருப்பது போலவே எமது உயர்வேதமாகிய கொரானிலும் சுத்தத்தைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

ஜோஸப்:—ஏன்! எமது வேதமும் அவ்வாறே கட்டளையிருக்கிறது நீங்கள் கூறுகிறபடி தெய்வவழிபாடு சிறந்ததே. நாங்கள் அதை மறுக்கவில்லை. கடவுள் அருளுடன் முயற்சியும் இருந்தால் எச்செயலும் முடியும். மார்க்கண்டன் முயற்சியால் ஊழையும் வெல்லவில்லையா? சாவித்திரி கணவனுயிரை மீட்கவில்லையா? முயற்சியால் ஆகாதது எதுவும் இல்லை.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்;,

'நோய்க்கிடங்கொடேல்,' "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்," என்றும் மூதுரைகளைக்கேட்டிருப்பீர்கள். ஆங்கில ஆசிரியர் ஒருவர், வந்த பின் நோயை நீக்குவதிலும் வாரமற்றடுப்பதே மேல் என்றார். அவ்வாறு நோய்கள் வாரமல் நீங்கள் தடுத்துக்கொள்வதற்காகவே, உங்கள்மீது அருள்கொண்ட கடவுள் சுத்தம் என்ற ஒன்றை அருளியிருக்கிறார். அவரே (நிர்மலன்) சுத்தவடிவாயிருக்கிறார் ஆதலின் அச்சுத்தத்தைக்கைக்கொண்ட பின்னரே உங்களுக்கு சுகம் கிடைக்கும். இப்பொழுது இராமசுவாமி வீட்டைப் பாருங்கள். இரண்டு தினங்களுக்கு முன் அஃதிருந்தவிதத்தையும் யோசியுங்கள்.

பண்டிதன்:—(சுகாதார் ஆசிரியரை நோக்கி) என் ஐயா! நேற்று சுப்பாத்தேவனிடம் மலை ஜுரத்திற்கு கொய்னா உட்கொள்ள வேண்டுமென்றீர்களே. ஆதியில் நமது பெரியவர்கள் அடைகஷாயம் உபயோகித்தார்களே? எந்நோயையும் அது தீர்க்கவில்லை?

சுகாதார் ஆசிரியர்:—உண்மை; நமது ஆயுள்வேதமுறை மிகச்சிறந்த தேயாகும். தக்க ஆயுள்வேதவைத்தியர்களிடம் மருந்து உட்கொள்ளுதல் நலமே.

கதிர்:—ஏன் ஐயா! சிலப்பேன்ஜுரம் என்றீர்களே சிறித்துக்கொண்டு பேன்கடித்தால் மனிதனுக்கு ஜுரம் வந்து விடுகிறது என்ன ஐயா இது!

சு. ஆ:—ஆம்! ஆம்! பேன்களாலேயே அந்த ஜுரம் உண்டாகிறது. ஒருமனிதன் தலையைச் சிவிக்கொள்ளாததனாலும் தலை முழுகாததனாலுமே இந்நோய் வருகிறது. மேலும் வண்ணானிடமிருந்துவரும் மடிகளையேது வைக்காமல் பலதினங்கள் உடுத்துக்கொள்ளுவதனால் பேன்கள் அவ்வாடைகளைப்பற்றுகின்றன. அவை கடிக்கும்போது ஒரு வகை விஷத்தைமனிதசரீரத்துட்செலுத்துகின்றன. அதனாலே அந்த ஜுரம் உண்டாகின்றது. அது மலேரியாவை போலவே விட்டுவிட்டுவரும் ஜுரம். இந்நோய்க்கு வேறு மருந்தில்லை. பேன்களை முற்றும் நீக்கிவிட்டால் நோயும் நீங்கிவிடும். இந்நோய் வந்துவிடுமாயின் உடனே தலை உரோமத்தைக்கத்தரித்து விடவேண்டும். அவ்வாறு செய்யவிருப்பமில்லாதவர்கள்லைசால், பெட்ரோல், சீமை எண்ணெய் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் வீசம்படி எடுத்து காற்படி தண்ணீரிலோ நல்லெண்ணெயிலோ கலந்து தேய்த்துத்தலைமுழுக, பேன்கள் நீங்கும். வஸ்திரங்களை நன்குதுவைத்து உலர்த்திக்கட்ட அவற்றிலுள்ள பேன்கள் மடியும். பேன்கள் மிகுதியாய்வாழும் உடைகளை எரித்துவிடுதலும் நலம்.

வேல்:—ஏனையா! வருஷாவருஷம் அம்மைவிளையாடிச் செல்லுகிறுளல்லவா? அதற்கு நாம் ஏதேனும் மருந்து உட்கொள்ளுகிறோமா. அவள் வந்து விளையாடி அகல்கிருள். நாம் சும்மாத்தானேயிருக்கிறோம் அது போலவேதான் இந்நோய்களெல்லாம். இதற்கெல்லாம் மருந்து என்ன ஐயா செய்யும்?

சு. ஆ:—உண்மைதான்! நாங்கள் இப்பொழுது நீங்கள் சொல்லு

வதை மறுக்கவரவில்லை. சில விஷயங்களை உங்களுக்கு எடுத்துக்கூறவேவந்தோம்.

அம்மைவந்து விட்டால் சும்மா இருக்கிறோம் என்கிறீர்கள். அம்மையுள்ள வீட்டுவாசலில்வேப்பிலை சொருகுகின்றார்களே எதற்காக? "இங்கு தொத்துநோய்வாழுகின்றது. வராதீர்கள்" என்று எச்சரிப்பதற்கேயாகும். மேலும் அம்மைநோய் கொண்ட ஒரு மனிதன் அணிந்தவஸ்திரங்களை பொது ஜனங்கள் உபயோகிக்கும் குளம் குட்டைகளில் நனைக்கலாகாதென்று துவைக்கலாகாதென்றும் நமக்குள் கட்டுப்பாடுகள் இருக்கின்றன அல்லவா? இவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்தனவேயாகும். அதேபோல் பிளேக், விஷபேதி, முதலியவைஉள்ள வீடுகளுக்கு பிறர்வரலாகாதென்றும் அவ்வீடுகளில் உண்ணலாகாதென்றும் சொல்லிகிறோம். இவ்வாறே பலவகைகளிலும் நாம் தொத்துநோய் பரவாதிருக்க முயல்கிறோம்.

பூசாரி:—காலம் கெட்டுப்போய்விட்டது. அதனால்தான் நோய்கள் வருகின்றன. முன் எல்லாம் இந்நோய்கள் வந்ததுண்டா?

சு. ஆ:—உண்மை: முன் காலத்தில் இப்பொழுது போல மோட்டார் வண்டிகளும், இருப்புப்பாதை தொடர்களும் இருந்ததில்லை. போக்குவரவு சாதனங்கள் அதிகமாயிருக்கும் காரணத்தினாலேயே இந்நோய்களெல்லாம் பரவுகின்றன.

கதிர்:—ஆமாம் ஐயா! அம்மையைப்பற்றி என்னவோ கூறினீர்களே, விவரமாய்ச் சொல்லுங்கள்.

சு. ஆ:—அம்மை மிகக்கொடிய நோய். அது எதனால் உண்டாகின்றதென்பது இன்னும் வெளிப்படவில்லை. அது தானாகவே யாதொரு பொருளின் உதவியும் இன்றி பரவும் தன்மை வாய்ந்தது. அரை மைல் தூரத்திற்கு இந்நோய் பரவும் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். இவ்வம்மை நம் நாட்டில் அளவிறந்த உயிர்ச்சேதத்தை விளைவித்திருப்பதுடன் அநேகருக்கு அங்கங்களையும் ஊனமாக்கியிருக்கிறது.

சு:—அப்படியா! அதற்கு மாத்திரம் மருந்து ஒன்றும் இல்லையோ?

சு. ஆ:—அதற்கு வேறொரு மருந்தும் இல்லை. வீடு முழுதும் சுத்தமாயிருத்தல் வேண்டும், நோயாளிக்குக் குளிர்ச்சியான உணவுகளைக் கொடுத்தலே நலம். அசுத்தம் கொஞ்சம் ஏற்பட்டாலும் அதன் கொடுமை அதிகப்படும்.

வேல்:—இதனைத் தடுப்பதற்கு ஏதேனும் வழி உண்டா?

சு. ஆ:—ஆம் ஒன்றிருக்கிறது. அது தான் அம்மைகுத்திக்கொள்ளுதல் [Vaccination] சிறு குழந்தைகளுக்குப் பிறந்த நான்காவது மாதத்திலேயே அம்மை குத்திவிடவேண்டும். பின் ஏழு வருஷத்திற்கொருமுறை மறு அம்மை வைத்துக்கொள்ளலும் [Re-Vaccination] அவசியம். சிலர் இதன் அருமையை அறியவில்லை. அம்மை குத்துடவர் வந்துவிட்டால் தம் குழந்தை குட்டிகளுடன் அநேகர் ஓடி ஒளிகிறார்கள். இது மிக்க பேதமையாகும். இரதிபோன்ற அழகிய பெண் குழந்தையொன்று அம்மையாற் கண்ணிழந்துவிடின் அக் குழந்தை தன் வாழ்நாள் முழுவதைம் இழந்துவிடுமல்லா? அப்பொழுது அப்பாவம் ஆதியில் அம்மைகுத்தத் தவறிய பெற்றோரையன்றோ சாரும். நம் நாட்டார் அம்மையால் விளையும் கேடுகளை அறிந்தும் இவ்வாறு செய்தல் என்றோ அறிகிலோம்.

கதிர்:—அதிருக்கட்டும். காலரா என்று சொல்லுகிறார்களே, அது என்ன நோய் ஐயா? அதைப்பற்றிச் சொல்லுங்கள்.

சு. ஆ:—காலரா என்பது தான் தமிழில் விஷபேதி என்று சொல்லப்படுகிறது. இது ஒருவகை விஷப்பூச்சியால் உண்டாகும் கொடியநோய். இந்த நோய்க்குக் காரணம் குளிரும் தேகசோர்வுமேயாகும். இதன் அறிகுறிகள் அடிக்கடி ஏற்படும் கஞ்சிபோன்ற மலக்கழிவும், நீர் போன்ற வாந்தியும், நீர்க்கட்டும் தசை வலிப்பும் மிகுதியான தேகச்சோர்வுமே. சில வேளைகளில் இவ்வியாதி ஆரம்பிக்கும் முன் வயிற்றளைச்சல் இருக்கும். அதை ஜாக்கிரதையாய் நிறுத்திவிட்டால் இவ் வியாதி வாரது. இந்நோய் வந்தவுடன் கைதேர்ந்த ஒரு

வைத்தியனிடம் சென்று சிகித்சை செய்துகொள்க. இல்லாவிடில் இவ்வியாதிக்கென ரிஜிஸ்டர் செய்த வியாபாரக் குறியுடைய மாத்திரையையோ, திராகவத்தையோ உட்கொள்க. பால், தண்ணீர் முதலியவற்றைக்காய்ச்சி அருந்துவதும் பழம் காய் முதலியவற்றை வேகவைத்து உண்ணலும் சுத்தமாயிருத்தலும் அவசியம். இந்நோயாளி ஆகாரத்தைச் சுடச்சுட உட்கொள்ளவேண்டும். அம்மை குத்திக்கொள்வது போலவே, ஒரு மருந்தைக் குத்திக்கொண்டும் இந்நோயைத் தடுத்துவிடலாம்.

வேல்:—இந்நோய் எப்படி ஐயா பரவுகிறது?

சு. ஆ:—எலி, கொசு முதலியவற்றைப் போலவே ஈ [Fly] யும் மனிதரது கொடும் விரோதியாகும். இவ் "ஈ" மூலமாகவே இந்நோய் பரவுகின்றது. ஈக்கள் நோயாளி கழித்த மலங்களிலும், வாந்திசெய்த நீரிலும் அமர்ந்திருந்து பின் பிறர் உண்ணும் உணவுப்பொருள்களின் மீது, குடிக்கும் ஜலத்திலும் வந்தமர்கின்றன. பின் அவ்வுணவை யுண்டவர் இந்நோய்க்கு ஆளாகிறார்கள். ஆகைபால் நான் இவ்வியாதியுள்ள வீடுகளுக்குப் போகலாகாதென்றும் அங்கு உண்ணலாகாதென்றும் கூறினேன். இந்நோய் மிகக்கொடியது. மிக விரைவிற் பரவும் தன்மை வாய்ந்தது. 1922ம் ஹூ பங்குனி உத்திர உத்ஸவத்தில் பழனியில் சில யாத்திரிகர்களுக்குக் கண்ட இந்நோய் அவர்கள் மூலம் நாலு திக்குகளிலும் காற்றினும் கடுகிப்பரவியது.

வேல்:—ஐயா! இந்நோயை உண்டாக்கும் விஷப்பூச்சி எவ்வாறு மனிதனைப் பற்றுகிறது.

சு. ஆ:—இது ஒரு அவசியமான கேள்விதான். அழுக்கடைந்த நீரிலேயே இப்பூச்சிகள் வாழ்கின்றன. அந்நீரை உபயோகிக்கும் ஜனங்களுக்கு இந்நோய் வருகிறது.

கதிர்:—நீர் எவ்விதங்களில் அசுத்தப்படுகிறது.

சு. ஆ:—பெரும்பாலும் காவலில்லாதபடி கிணறுகளில் மனிதர்

கால்கை கழுவுகிறார்கள் அது அறியாத பலர் அதிற் குளிக்கிறார்கள். இவற்றையறியாத சிலர் இந்நீரையே தாகசாந்தி செய்து கொள்ளவும் உபயோகிக்கிறார்கள்.

வேலு:—படிவைத்திராத ஊர்க்கிணறுகள் அழுக்கடைவதில்லையோ?

சு. ஆ:—சில இடங்களில் கைபிடி சுவர் இல்லாமலே கிணறுகளைக் கட்டிவிடுகிறார்கள். ஜனங்கள் அதன் அருகிலேயே பாத்திரம் விளக்குதல் குளித்தல் முதலிய காரியங்களைச் செய்தலால், அந்நீர் கிணற்றுக்குள்ளே வழிந்து விடுகிறது அல்லாமல் அந்நீர் அழுக்கடைந்த மண்ணுடன் கலந்து உள்ளே ஊறிக் கிணற்றுற ஜலத்தையும் அழுக்காக்குகின்றது. ஆகையால் கைபிடி சுவருடன் இறைக்கும் நீர் வழிந்து வெளிப்பக்கம் ஓடத் தக்க நிலையில் கிணறுகள் கட்டினால் இத்தகைய அபயாம் ஏற்படாது.

கோடாங்கி:—கதிர்வேல்நாடாரைப் பார்த்து நீ கேட்டது போலவே நான் ஒரு வியாதியைப்பற்றி ஐயாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். (சு. ஆ நோக்கி) ஐயா! இன்புளுயன்ஸா என்கிறார்களே அது என்னையா.

சு. ஆ:—இப்ராஹிம்! நீ அதைப்பற்றி அவர்களுக்குக் கூறுவாயென்று நம்புகிறேன்.

இப்ரா:—அப்படியே செய்கிறேன். இன்புளுயன்ஸா என்ற விஷஜுரம் உலக மெங்கும் பரவிப் பீடிகின்றது. பலநாடுகளில் இந்நோயால் இறந்தோர் கணக்கிறந்தோர்? கோடை காலத்தில் இந்நோயினால் அதிக அபாயம் ஏற்படவில்லை; இந்த ஜுரம் வந்து நின்ற பிறகு நோயாளி மிகுந்த பலஹீனம் அடைகிறான். நின்ற இந்த ஜுரம் மறுபடி பீடித்து விடுமாயின் புன் குணமடையாது? ஆகையால் இதைத்தடுப்பதற்குப் பலவிதங்களிலும் முயலவேண்டும்.

அப்:—இந்நோய் அடையாளங்கள் யாவை?

இப்ரா:—சொல்லுகிறேன். இருமலும் தும்பலும் சாதாரணமாய் ஜுரம் வருவதற்கு முன் உண்டாகும். அப்படி உண்டாகும் போது அந்நோயாளியின் அருகில் எவரும் போகலாகாது. ஏன் எனில் அது தொத்து வியாதி நோயாளி வெளி விடும் காற்றின் மூலமாயே அவ்விஷம் பரவுகின்றது.

கதிர்:—இந்நோயைத்தடுக்கும் உபாயங்கள் எவை?

இப்:—காலாகாலத்தில் உணவருந்தவேண்டும். வேண்டிய அளவு தூங்கவேண்டும். தேகப்பயிற்சி செய்யவேண்டும். ஜலதோஷம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். லாகிரி வஸ்துகளை உபயோகிக்கலாகாது. நோயாளி தும்மும் பொழுதும் இருமும் பொழுதும் மூக்கையும் வாயையும் மூடிக்கொள்ளல் வேண்டும். நல்ல காற்றுள்ள இடத்திலேயே இருக்க வேண்டும். ஒரு தேயிலைக் கரண்டி உப்பை அரைப்படி ஜலத்தில் போட்டுக் கரைத்து மூக்கின் உட்புறத்தை அடிக்கடி கழுவ வேண்டும். உப்பு ஜலத்தை அடிக்கடி தொண்டையில் விட்டு கொப்புளிக்க வேண்டும். இச்சுரத்தால் வருந்தியவர்கள் முற்றிலும் குணமான பின் ஒரு வாரம் வரையில் கூட்டங்களிற் சேரலாகாது. இவ்விதமாக இருந்து வந்தால் நோய் வாராமல் தடுத்தலும் வந்த நோயை நீக்கலும் எளிதாகும். இவைகளே இந்நோயைப்பற்றிய குறிப்புகள்.

[அமர்கிறான்]

க. ஆ:—இது காறும் நம்மை அணுகும் வியாதிகளையும் அவற்றின் மூலகாரணங்களையும் அவ்வியாதிகளைத்தடுக்கும் முறைகளையும் கூறினோம். அவ்வியாதிகள் வந்ததன்பின் சிகிச்சை செய்தலைவிட வருமுன்னரே அவற்றைத்தடுத்தல் நலம். அவ்வாறு செய்தற்கு சிற்சிலமுக்கிய விதிகளை அனுஷ்டித்தல் வேண்டும்.

காற்று:—நாம் வாழ்வதற்கு இன்றியமையாதது நல்லகாற்று அஃதில்லாவிடின் நாம் அரைக்கணமும் உயிர்வாழமுடியாது. நல்ல காற்றுவீட்டினுள் வரவும் தீயகாற்று வெளிச்செல்லவும் ஏற்பசா ரங்களுடன் நமது வீடுகளை அமைத்தல்வேண்டும். வீடுகளின ருகில் குப்பைசாணம் முதலிய கெட்டவஸ்துக்களைக்குவித்தல் கூடாது. ஏனெனில் இவற்றின் மீது பட்டுவரும் கெட்டகாற்றை நாம் உட்கொள்ள நேரிட்டால் பெரும் வியாதிகள் நம்மைத்தொடா இடமுண்டாகும். நாம் வசிக்கும் வீட்டு ஜன்னல்களை எப்பொழு தும் திறந்து வைத்திருப்பதே உத்தமம். இப்படி ஒவ்வொருவரும் தம் வீட்டை சுத்தமாகவைத்திருப்பாராயின் கிராமமுழுதும் சுத்த மாயிருக்குமென்பதிலுமைய முண்டோ?

ஜலம்:—நமது உயிர் வாழ்க்கைக்கு அத்யாவச்யமானது ஜலம். நாம் குடிக்கும் ஜலம் மிகசுத்தமானதாயிருக்கவேண்டும். அசுத்தஜலத்தை, நம் கண்ணுக்குத் தெரியாத (சூக்ஷ்மஜீவிகளான) புழு பூச்சிகளுடன் உட்கொள்ளுவதினால் விஷபேதி முதலிய கொடி யநோய்கள் உண்டாகின்றன. குடி நீரெடுக்கும் கிணற்றருகில் பல மரங்களை வளர விடலாகாது. ஏன் எனில் அம்மரங்களின் இலை சருகு பூமுதலியன கிணற்றில் விழுந்து அழுகிவிட்டால் ஜலமும் கெட்டுவிடும். கிணற்றருகில் சாக்கடை முதலியவைகளை ஓடவிடுத லும் கூடாது. கைபிடி சுவர்இல்லாத கிணறுகள் கட்டுவதினால் பலதீங்குகள் சம்பவிக்குமென்று முன்னரே கூறினோம். ஆதலால் குடிஜலம் எடுக்கும் கிணறுகளை மிகவும் சுத்தமாய் வைத்துக்கொள் ளமுயலவேண்டும். எப்பொழுதும் ஜலத்தை நன்று காயச்சிவடி கட்டி ஆரவைத்துக்குடித்தல் நலம். உணவு.

"மிகினும் குறையினுநோய் செய்யுநூலோர் வளி
முதலா எண்ணிய மூன்று,,

என்று நாயனர் அருளியிருக்கின்றமையால் உணவுகளை அளவறிந்துட்கொள்ளவேண்டும். நாம் உண்ணும் உணவு சுத்தமாயும் பக்குவமாயும் இருக்கவேண்டும். அழுகிய பழங்களையும், நன்ருய்ப்பழுக்காதகாய்களையும் மற்றும் ஜீரணமாகாத, பதார்த்தங்களையும் உண்ணக்கூடாது. எவ்வளவு ஆடம்பரமான போஜனமாயினும் காலம் தப்பி உண்ணலாகாது. "பாலோடாயினும் காலமறிந்துண்,, என்றதிருவாக்கைப்பொன்னேபோல் போற்றல்வேண்டும்.

சுருங்கச் சொல்லின் நாம் உட்கொள்ளும் காற்றும், அருந்தும் ஜலமும், உண்ணும் உணவும், உடுக்கும் உடையும், படுக்கும் படுக்கையும் சுத்தமாயிருப்பின் சுகஜீவிகளாயிருக்கலாம்.

சகோதரர்களே! பீடையைக் கொடுக்கும் மார்கழிமீ முடியப் போகிறது. சுகத்தைக் கொடுக்கும் தைமீ நெருங்கிவிட்டது. அனைவரும் ஆனந்தமாய் சங்கராந்தி புருஷனுக்குப் பொங்கல் வைத்து மகிழ்வீர்கள். அதற்குள்ளாக இங்கு பரவியுள்ள நோய்களெல்லாம் தீர்ந்துவிடும். வர இருக்கும் சுகவருஷத்திற்கு அறிகுறியாக இத்தைமாதத்தின் முதல் வாரத்தில் சுகவாரத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்வீராக. உங்களுக்கு பல நலங்களையும் ஈந்து காக்குமாறு இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேன். வர இருக்கும் புத்தாண்டு உங்களுக்கு சுகரேசனக விளங்குக.

## கரகோஷம்.

இரா:—அன்புடைய சகோதரர்களே நம்மீது தாயிற்சிறந்த அன்புபூண்ட ஆசிரியர் அவர்களது மொழிகளை நன்கு கேட்டீர்கள். அவர்கள் கூறிய பிரகாரம் ஒழுகிவருதலே அவருக்கு நாம்

செய்யும் ஏற்ற கைம்மாறு ஆகும். நம்மீது எழுந்த அன்பி
னால் இங்கு வந்து நம் புனிதமாரியிற் பெய்து ஆதரித்த சனம்
ஆசிரியரவர்கட்கும், நம் நண்பர்கட்கும் மகிழ்ச்சியுள்ள சா
கோஷத்தினால் வந்தனத்தைச் செலுத்துவோமாக.

லோகாசமஸ்தாஸ்ஸுகினோபவந்து.

தமிழ்நாடு ... க காப்பக நூலகம்
186|64
சென்னை-600.003

முற்றிற்று.

---